# அதிதீவிர வெப்பத்தில் ஜனநாயகம்: கோடைகால தேர்தல்களின் முடிவா?

இந்தியா மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும், அபாயகரமாக உயர்ந்த வெப்பநிலைகளின் மத்தியில் மக்கள் வாக்களிக்க அழைக்கப்படுகின்றனர்; இதில் அவர்களின் உடல்நலன் மட்டுமின்றி, ஜனநாயகத்தையும் ஆபத்தில் தள்ளுகிறது.



2024-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது, இந்திய மாநிலமான திரிபுராவின் தலைநகர் அகர்தலாவில் வாக்களிப்பதற்காக வரிசையில் காத்திருந்தபோது, ஒரு பெண் தண்ணீர் குடித்து உடலுக்கு நீர்ச்சத்தைப் புதுப்பித்துக்கொள்கிறார். (படம்: Abhisek Saha / Majority World CIC / Alamy)

[பிரியங்கா திருமூர்த்தி]

மே 8, 2026

கடந்த மாத இறுதியில் காலை 11 மணியளவில், தமிழ்நாட்டின் சென்னையைச் சேர்ந்த 29 வயதான டி.டி. அச்சுதன், ஒரு பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த தனது வாக்குச்சாவடிக்கு வாக்களிக்கச் சென்றார். பிற்பகலுக்கு பின்னர் வாக்குச்சாவடிகளில் வழக்கமாக உருவாகும் நீண்ட வரிசைகளையும்,

அதனுடன் வரும் கடுமையான வெப்பத்தையும் தவிர்க்கவே அவ்வாறு செய்தார்.

அவர் அங்கு சென்றபோது, குறைந்தது 60 பேர் வரிசையில் காத்திருந்தனர். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கே நிழலான நடைபாதைக்குள் நிற்க இடம் கிடைத்தது. "மீதமிருந்த நாங்கள் மர நிழல்கூட இல்லாத திறந்த வெளியில் நிற்க வேண்டியிருந்தது; அது மிகவும் மோசமான அனுபவமாக இருந்தது," என்று அச்சுதன் கூறுகிறார்.

இந்தக் கட்டுரையின் முதல் பகுதியில், வெப்பநிலை கடுமையாக உயரும்போது வாக்குகளைப் பெற தேர்தல் பிரச்சாரம் நடத்துவதில் உள்ள அபாயங்கள் குறித்து ஆராயப்பட்டது; இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை இந்தியா இன்னும் முறையாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. இப்போது, இரண்டாம் பகுதியில், வாக்குப்பதிவு நாளில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நாம் ஆராய இருக்கிறோம்.

இந்த மே மாதம் இந்தியாவின் பல மாநிலங்களில் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. சென்னையில் நிலவிய கடும்வெப்பம் சில வாக்காளர்களுக்கு தாங்கமுடியாத சுமையாக மாறியது.

வாக்களிப்பதற்காக அச்சுதன் இரண்டு மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது; அதில் ஒரு மணி நேரம் நேரடி வெயிலின் கீழ் கழிந்தது. "அது மிகவும் சோர்வூட்டும் அனுபவமாக இருந்தது," என்று அவர் கூறுகிறார். "வீட்டிற்கு திரும்பியபின் உடலை இயல்புநிலைக்குக் கொண்டுவர சில மணி நேரம் தூங்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகும் நீரிழப்பு உணர்வு இருந்தது," என்றும் அவர் கூறுகிறார்.

காலநிலை மாற்றம் வெப்பநிலையையும் அதனுடன் தொடர்புடைய உடல்நல அபாயங்களையும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில், மக்களின் உடல்நலத்தை மட்டுமல்லாமல் வாக்களிக்கும் உரிமையையும் வெப்பநிலை பாதிக்கத் தொடங்கியுள்ளது என்ற கவலை அதிகரித்து வருகிறது.

சென்னையில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் பணியாற்றிய அதிகாரிகள், ஐந்திற்கும் அதிகமான வாக்குப்பதிவு அறைகள் உள்ள மையங்களில்தான் கூடாரங்கள் அமைக்கப்பட்டதாக Dialogue Earth-க்கு தெரிவித்தனர்.

2024ஆம் ஆண்டு மார்ச் முதல் ஜூலை 25 வரை — அதாவது இந்தியாவின் கடந்த பொதுத்தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரமும் வாக்குப்பதிவும் நடைபெற்ற காலகட்டத்தில் — கடுமையான வெப்பம் காரணமாக 370-க்கும் மேற்பட்ட

உறுதிப்படுத்தப்பட்ட உயிரிழப்புகள் நிகழ்ந்ததாக அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த எண்ணிக்கைகள் உண்மையைவிட குறைவாக மதிப்பிடப்பட்டவை என சில நிபுணர்கள் கருதுகின்றனர். உத்தரப் பிரதேசத்தில் மட்டும், வாக்குப்பதிவின் இறுதி நாளில் கடும் வெப்பத்தால் குறைந்தது 33 தேர்தல் பணியாளர்கள் உயிரிழந்தனர்.

2024 ஏப்ரல் 24 அன்று, இந்தியாவின் சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சரான நிதின் கட்காரி, மேற்கு மகாராஷ்டிராவில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது மேடையிலேயே மயங்கி விழுந்தார். பின்னர் உடல்நலம் தேறியதும், X சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், “வெப்பம் காரணமாக உடல் அயர்ச்சியாக உணர்ந்தேன்” என்று குறிப்பிட்டார். அந்த பொதுக்கூட்டம் பிற்பகல் 4.30 மணிக்கு — அதிகபட்ச வெப்பநிலை வழக்கமாகக் குறையத் தொடங்கும் நேரத்திற்குப் பிறகு — நடைபெற்றிருந்தபோதிலும், அன்றைய தினம் அவரது பிரச்சார நிகழ்வு நடைபெற்ற இடத்தில் வெப்பநிலை 38°C ஆக இருந்தது.

அந்த ஆண்டின் பொதுத்தேர்தலில் வாக்காளர் பங்கேற்பு விகிதம் 65.8% ஆக இருந்தது. இது 2019 தேர்தலின் 67.4% வாக்குப்பதிவு விகிதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும்.

இந்தியாவின் தலைநகரமான புதுதில்லியில் கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்த வாக்குப்பதிவு பதிவானது. அதேபோல், 2024ஆம் ஆண்டில் கேரளாவின் வாக்காளர் பங்கேற்பு கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் குறைந்து இருந்தது. கேரளாவின் தலைமைத் தேர்தல் அதிகாரியான சஞ்சய் பால், பல வாக்குச்சாவடிகளில் பிற்பகல் 3 மணிக்குப் பிறகே அதிகமான மக்கள் வருகை பதிவானதாக நியூஸ் மினிட் ஊடகத்திடம் தெரிவித்தார்; கடும் வெப்பம் காரணமாக மக்கள் வாக்களிப்பதை தாமதப்படுத்தியிருக்கலாம் என அவர் கூறினார். மேலும், அந்த ஊடகம் மேற்கோள் காட்டிய உதவி தேர்தல் அதிகாரி ஒருவர், காலை நேரங்களில் நீண்ட வரிசைகள் இருந்ததால் சிலர் வீடு திரும்பிச் சென்றதாகவும், பின்னர் வெப்பத்தைத் தவிர்க்க மீண்டும் வாக்களிக்க வராததாகவும் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக நடைபெற்ற தேர்தல்களைப் பாதித்த காரணிகள் பல இருந்தாலும், வாக்குப்பதிவு நடைபெறுவதற்கும் முன்பே தேர்தல் பிரச்சாரங்களின் போக்கை வெப்பநிலை மாற்றத் தொடங்கியிருந்தது.

“வெப்பநிலை வாக்காளர் பங்கேற்பை எவ்வாறு பாதிக்கிறது என்பதை நிச்சயமாக ஆய்வு செய்ய வேண்டும். கோடைக்கால தேர்தல்கள் நாளுக்கு நாள்

மேலும் சவாலானவையாக மாறப்போகின்றன; அது வாக்காளர்களையும் தேர்தலில் ஈடுபடும் அனைவரையும் பாதிக்கும்," என்று காலநிலைச் சிக்கல்கள் குறித்த ஆலோசனைகளை வழங்கும் NRDC இந்தியப் பிரிவின் காலநிலைத் தாங்குத்திறன், சுகாதாரத் திட்டங்களை வழிநடத்தும் அபியந்த் திவாரி கூறுகிறார்.

**விளிம்புநிலை மக்களுக்கே பாதிப்பு**

நீண்டநேரம் வெப்பத்தில் இருப்பது சோர்வு, சிந்தனைத் திறன் குறைபாடு, இதய-ரத்த நாள அமைப்பின் மீது அழுத்தம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மேலும், நகர வெப்பத் தீவு (urban heat island) விளைவால் நகரங்களில் வெப்பநிலை இன்னும் அதிகமாக இருக்கும் நிலையில், கடுமையான வேலை நேரத்தை முடித்த பிறகு பல தொழிலாளர்கள் உடலை இயல்புநிலைக்கு மீட்டெடுக்கவே போராடுகின்றனர்.

"வாக்குப்பதிவு நாள் வரும்போது, பல தொழிலாளர்கள் ஏற்கனவே உடல்ரீதியாக மிகவும் சோர்வடைந்த நிலையில் இருந்தார்கள். அதன் பிறகும் அவர்கள் திறந்த வெயிலில் பலமணிநேரம் நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டியிருப்பது, தீவிர உடல்நல ஆபத்தாக மாறக்கூடும்," என்று HeatWatch அமைப்பின் நிறுவனர் அபேக்ஷிதா வர்ஷ்னே கூறுகிறார்.

இந்த தாக்கம் சமூக, பொருளாதாரரீதியாக பின்தங்கிய மக்களிடையே அதிகமாக உணரப்படக்கூடும் என்றும், அதன் விளைவாக அவர்கள் வாக்களிக்காமல் இருப்பதற்குத் தீர்மானிக்க நேரிடலாம் என்றும் அவர் அஞ்சுகிறார்.

"வெப்பநிலை அதிக அளவில் உடலை பாதிக்கக்கூடியது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்," என்று பெயர் வெளியிட விரும்பாத இந்தியத் தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் கூறினார். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் போதுமான நிழல் உள்ளிட்ட "குறைந்தபட்ச வசதிகள்" ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், கடுமையான வெப்ப நேரங்களைத் தவிர்த்து மக்கள் வாக்களிக்க வசதியாக, வாக்குப்பதிவு அதிகாலையிலேயே தொடங்கி மாலை 6 மணிவரை நடைபெறுமாறு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**உலக அளவிலான பிரச்சனை**

2022 முதல் 2025 வரை, குறைந்தது எட்டு நாடுகளில் நடைபெற்ற 10 தேர்தல்கள் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக, சர்வதேச ஜனநாயக - தேர்தல்

ஆதரவு நிறுவனம் (International Institute for Democracy and Electoral Assistance) தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கிறது. அவை அமெரிக்கா, மெக்சிகோ, ஸ்பெயின், பிரான்ஸ், ருமேனியா, இந்தியா, மாலத்தீவு, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளாகும்.

2025 மே மாதத்தில் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது, வெப்ப அலை காரணமாக வெப்பநிலை அபாயகரமான அளவுக்கு உயர்ந்தது. சில வாக்குச்சாவடிகளில், கடும் வெப்பத்தால் வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயலிழந்ததாக கூறப்படுகிறது; இதனால் ஏற்பட்ட தாமதங்கள், வாக்காளர்கள் இன்னும் நீண்ட நேரம் வெப்பத்தில் நிற்க வேண்டிய சூழலை உருவாக்கின.

மெக்சிகோவில் 2024 பொதுத்தேர்தலுக்கு முந்தைய காலகட்டத்தில், நாட்டின் சில பகுதிகளில் வெப்பநிலை 50° செல்சியஸ் வரை உயர்ந்தது. இதனால் பல உயிரிழப்புகளும் பதிவாகின.

அமெரிக்கா தனது மத்திய தேர்தல்களை கடந்த நவம்பர் மாதத்தில் நடத்தியது. அங்கேயும், அதிக வெப்பநிலை அரசியல் நிகழ்வுகளில் சிக்கல்களை உருவாக்கத் தொடங்கியுள்ளது. 2024ஆம் ஆண்டு, அரிசோனாவில் டொனல்ட் ட்ரம்ப் உரையாற்றிய உள்ளரங்க தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்குள் நுழைய காத்திருந்தபோது, வெப்பம் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக 11 பேர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, 2025 ஜூன் 24 அன்று, நியூயார்க் நகரின் ஜான் எப். கென்னடி சர்வதேச விமான நிலையத்தில் வெப்பநிலை 102°F (39°C) வரை பதிவானது; இதனால் அந்த இடத்தின் வரலாற்றில் மிக அதிக வெப்பமான ஜூன் மாத நாளாக அது அமைந்தது. நகரின் முதியவர்கள், நீண்டநாள் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட மக்கள் வீட்டிற்குள் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதே நாளில்தான், பின்னர் நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட மேயர் வேட்பாளருக்கான வாக்குப்பதிவும் நடைபெற்றது.

நியூயார்க் நகரத் தேர்தல் வாரியம், வாக்குச்சாவடிகளில் மின்விசிறிகள் அமைத்து குடிநீர் வழங்கப்படும் என்று உறுதியளித்தது. ஆனால், முன்னுரிமைத் தேர்தலுக்கு நான்கு நாட்களுக்கு முன்பு, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கிரகோரி மீக்ஸ், ராட்னிஸ் பிச்சொட் ஹேர்மலின் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், "நியூயார்க் நகரத் தேர்தல் வாரியம் இந்த வெப்ப அலை நிலையை சமாளிக்கத் தேவையான தயார்நிலையுடன் இல்லை" என்று தெரிவித்தனர்.

இது குறித்து கருத்து கேட்கப்பட்டபோதும், நியூயார்க் நகரத் தேர்தல் வாரியம் எந்த பதிலும் வழங்கவில்லை.

**கைக்கெட்டும் தூரத்தில் தீர்வு**

தேர்தல் நாளில் வெப்பத்திலிருந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மூன்று முக்கிய அம்சங்களே அடிப்படையாக உள்ளன என்று நிபுணர்கள் கூறுகின்றனர்: கடுமையான வெப்ப நேரங்களைத் தவிர்க்கும் வகையில் வாக்குப்பதிவு நேரங்களை அமைத்தல்; மக்கள் வெயிலில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டாதபடி கூட்ட நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்; வெப்ப அழுத்தத்தைத் தடுக்கும் வகையில் வாக்குச்சாவடி கட்டமைப்புகளை உருவாக்குதல்.

இதற்காக குளிர்விப்பான்கள், மின்விசிறிகள், நிழலான வெளிப்புறக் காத்திருப்பு இடங்கள் போன்ற வசதிகளுடன், முதியவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய வாக்காளர்களுக்கான விரைவு வரிசைகளும் ஏற்படுத்தப்படலாம். சென்னையில், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல் வாக்களிக்கச் செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக பல வாக்காளர்கள் Dialogue Earth-க்கு தெரிவித்தனர்.



2019ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தின் பருயிபூரில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிக்க மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். (படம்: SOPA Images / Alamy)

இந்தியா தற்போது செய்வதைப் போல மாலை 6 மணிக்கே வாக்குப்பதிவை முடிப்பது, வெப்பமடைந்து வரும் உலகில் ஒரு நல்ல நடைமுறையாக இருக்காது என்று சிலர் கருதுகின்றனர்.

“கடந்த தேர்தல்களின் வாக்குப்பதிவு முறைகளைப் பார்த்தால், அதிகமான மக்கள் காலை 10 மணிக்கு முன்பும் பிற்பகல் 3 மணிக்குப் பிறகும் வருவது தெளிவாகத் தெரிகிறது. வெப்பத்தின் தன்மையை கருத்தில் கொண்டால், வாக்குப்பதிவு நேரத்தை மாற்றி, மாலை 6 மணிக்குப் பதிலாக இரவு 9 மணிவரை மக்கள் வாக்களிக்க அனுமதிப்பது புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும்,” என்று கேரளாவில் உள்ள ஒருங்கிணைந்த கிராமப்புற தொழில்நுட்ப மையத்தின் (Integrated Rural Technology Center) ஆய்வாளரான ராஜேஷ்.கே கூறுகிறார்.

இதைக் காட்டிலும் ஒரு முழுமையான மாற்று வழியானது, வெப்பத்தைத் தவிர்க்கும் வகையில் தேர்தல்கள் நடைபெறும் காலத்தையே மாற்றுவது என்பதாகும்.

இந்தியாவில் பொதுத்தேர்தல்கள் பெரும்பாலும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களான கடும் கோடை காலத்தில் நடைபெறுகின்றன. இதற்கான முக்கிய காரணம், மக்களவையும் மாநில சட்டமன்றங்களும் கொண்டுள்ள பதவிக்காலம் பெரும்பாலும் மே அல்லது ஜூன் தொடக்கத்தில் முடிவடைவதுதான்; எனவே, தேர்தல்கள் அதற்கு முந்தைய வாரங்களில் திட்டமிடப்படுகின்றன. மேலும், ஜூன் முதல் செப்டம்பர் வரை நீளும் பருவமழைக் காலம் தேர்தல்கள் மற்றும் பிரச்சாரங்களுக்காகத் தவிர்க்கப்படுகிறது, ஏனெனில் கனமழை வாக்குப்பதிவை பாதிக்கக்கூடும்; அதோடு, பல பகுதிகள் செல்ல முடியாதவையாக மாறக்கூடும்.

இத்தகைய கால அட்டவணை மாற்றத்தை மேற்கொள்ளும் அதிகாரம் தங்களிடம் இல்லை என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

“தேர்தல் தேதிகளை விருப்பப்படி மாற்றிக்கொள்ளும் சுதந்திரம் எங்களுக்கு இல்லை. இது போன்ற அனைத்து மாற்றத்திற்கும் உயர்மட்டத் தீர்மானம் தேவைப்படும்,” என்று இந்தியத் தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் கூறுகிறார். இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்துக்கு எடுத்துச்சென்று

அதற்கான சட்டம் இயற்ற வேண்டியிருக்கும் என முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையரான டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்.

அதேநேரம், தேர்தல்களை குளிர்காலத்திற்கு மாற்றுவது தனித்துவமான நிர்வாகச் சவால்களையும் உருவாக்கும். குறிப்பாக, தேர்தல் பணிகளில் பெருமளவில் ஈடுபடுத்தப்படும் ஆசிரியர் பணியாளர்கள் அந்நேரத்தில் கிடைப்பார்களா என்பது ஒரு முக்கிய பிரச்சினையாகும். இருந்தாலும், வெப்ப அலைகள் அடிக்கடி நிகழ்தல், அதன் தீவிரம் - நீடிப்பு தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், கோடைக்காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவது பொதுச் சுகாதார அபாயமாகக் கருதப்படும் நிலையம் உருவாகியுள்ளது.

"பத்து ஆண்டுகளுக்கு முன்புவரைகூட, வாக்காளர் பங்கேற்பை பாதிக்கும் ஒரு காரணியாக வெப்பநிலை இருக்குமென்று ஒருபோதும் கருதப்படவில்லை. ஆனால் இப்போது அதன் தாக்கத்தை நாம் புறக்கணிக்க முடியாது," என்று கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்.

இந்த பிரச்சினையை அரசியல் கட்சிகள் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், தேர்தல் ஆணையமும் இதை மிகுந்த கவனத்துடன் அணுக வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். "தேர்தல்களை ஜனவரி முதல் ஏப்ரல்வரை நடத்த முடியும். ஆனால் இந்த மாற்றம் அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடனும் சட்ட மாற்றங்களுடனும் மட்டுமே சாத்தியமாகும்," என்று அவர் கூறுகிறார்.

மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப நீண்ட கால தேர்தல் அட்டவணைகளை மாற்றுவது குறித்து விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கும் நிலையில், அதற்குள் மக்களை பாதுகாப்பாக வைத்திருக்க உடனடி நடவடிக்கைகளும் தேவைப்படலாம். அதாவது, வெப்பநிலை தற்போது எவ்வளவு பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்பதை அங்கீகரித்து, அனைவரும் பாதுகாப்பாக வாக்களிக்கக்கூடிய சூழலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தேவை.

"பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அல்லது இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டால் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே உள்ளன," என்று அபேக்ஷிதா வர்ஷ்னே கூறுகிறார். மேலும் "இப்போது பல மாநிலங்களில் அதிகாரபூர்வமாக பேரிடராக அறிவிக்கப்பட்டுள்ள கடும் வெப்பமும் அதே அடிப்படையில் கருதப்பட வேண்டும்." என்கிறார் அவர்.

***